# <u>செய்திக்குறிப்பு</u>

திரு.R.குலோத்துங்கன், வயது 65, த/பெ ராசாங்கம், எண்.22, புதுதெரு, தரசூர் கிராமம், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவரின் நிலத்தில் விளைந்த 300 நெல் மூட்டைகளை சிதம்பரம் தாலுக்கா, தரசூர் கிராமத்தில் இயங்கும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் கொள்முதல் செய்ய. அந்த கொள்முதல் நிலையத்தில் மேஸ்தியாக வேலை செய்யும் திரு.C.வேல்மணி, த/பெ சின்னதம்பி, தரசூர் கிராமம், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவர் கடந்த 12.02.2025 ஆம் தேதி காலை 11.30 மணியளவில் ஒரு நெல்மூட்டைக்கு ரூ.55/- வீதம் ரூ.16,500/- லஞ்சமாக கேட்டுள்ளார். புகார்தார்ருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாததால் 14.02.2025 அன்று கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் மேற்படி மேஸ்திரி திரு.C.வேல்மணி என்பவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி புகார் மனு கொடுத்துக்கொண்டார். அவரது புகார் மனு மீது கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.2/2025 பிரிவு, 7 of The Prevention of Corruption (Amendment) Act, 2018, படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் இன்று 15.02.2025ம் தேதி வாதி திரு.R.குலோத்துங்கன் என்பவரிடம் ரூ.16,500/- லஞ்சப்பணத்தை மேஸ்திரி திரு.C.வேல்மணி கேட்டு வாங்கியபோது அங்கு மறைந்திருந்த காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையிலான லஞ்ச ஒழிப்பு போலீசார் லஞ்ச பணம் வாங்கிய மேஸ்திரி திரு.C.வேல்மணி என்பவரை கைது செய்துள்ளனர்.